செய்தி வெளியீடு எண்:1346 நாள்:15.12.2021

# <u>செய்தி வெளியீடு</u>

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2022 தமிழ்நாடு மாநிலம் முழுவதும் 01.11.2021 முதல் 05.01.2022 வரை நடைபெற்று வருகிறது. மேலும், தற்போது நடைபெற்று வரும் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2022 குறித்த விளக்கக் கூட்டத்தை தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அவர்கள் 29.10.2021 அன்று அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடத்தினார். அக்கூட்டத்தின்போது, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகள் தற்போது ஒவ்வொரு கட்சிக்கும் வழங்கப்பட்டு வரும் அச்சிடப்பட்ட ஒரு வாக்காளர் பட்டியல் நகலுக்கு பதிலாக இரண்டு அச்சிடப்பட்ட வாக்காளர் பட்டியல் நகல்களை வழங்குமாறு கோரியிருந்தனர். இது தொடர்பாக, **"இந்திய தேர்தல் ஆணையம் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒரு அச்சிடப்பட்ட வாக்காளர் பட்டியல் நகல் மற்றும் ஒரு மென் நகல் குறுந்தகடுக்கு பதிலாக, இரண்டு அச்சிடப்பட்ட வாக்காளர் பட்டியல் நகல்களை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்குமாறு வாக்காளர் பதிவு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது".**

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9